A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண்11 / 2023</u>**

திரு சக்தி,
த/பெ.வெள்ளையன்,
ஆலங்குட்டை கிராமம், அம்மாபேட்டை (அஞ்சல்),
அரூர் தாலுகா, தருமபுரி – 636906.

………மேல்முறையீட்டாளர்
(திரு S. சதாசிவம் )

எதிர்

செயற்பொறியாளர்/இ&ப/அரூர்,
தருமபுரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திரு.வி.க. நகர், அரூர் – 636 903,
தருமபுரி தாலுக்கா

. . . எதிர்மனுதாரர்
(திரு T. வனிதா, செயற்பொறியாளர்/இ&ப/அரூர்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 31-01-2023</u>**

**<u>கேட்புரை நாள்: 20-04-2023</u>**

**<u>ஆணை நாள்: 27-04-2023</u>**

31.01.2023 அன்று பெறப்பட்ட திரு சக்தி, த/பெ.வெள்ளையன், ஆலங்குட்டை கிராமம், அம்மாபேட்டை (அஞ்சல்), அரூர் தாலுகா, தருமபுரி – 636906 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 11/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.04.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட

வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை**

மின் இணைப்பு எண் 08–127–013–140 –ஐ நிரந்தரமாக துண்டிக்க வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனக்கு சொந்தமான சர்வே எண்ணுடன் கூட்டு பாத்தியமாக சர்வே எண் 72/3–இல் உள்ள கிணற்றுக்கு வேடகட்டமடுவு பஞ்சாயத்து பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதை துண்டிப்பு செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 வேடகட்டமடுவு பஞ்சாயத்து அவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் மி ன் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் , மேல்முறையீட்டாளரின் கோரிக்கை அடிப்படையில் மின் இணைப்பானது மேல்முறையீட்டாளரின் சர்வே எண்ணில் உள்ளது என்பதற்கான ஆதாரத்தை சமர்ப்பித்தால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, மின் இணைப்பு எண் 08–12–013–140–ஐ துண்டிக்க வேண்டி மேல்முறையீட்டாளர் தருமபுரி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 16.09.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் , தருமபுரி மின்பகிர்மான வட்டம் 29.12.2022 அன்று தன்னுடை ய ஆணையை அளித்துள்ளது . மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 தருமபுரி மின்பகிர்மான வட்டம் , மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 29.12.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது . அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மின் இணைப்பு எண் 127-013-140 என்பது பொது மக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக வீதப்பட்டி II A-ல் தனி அலுவலர், வேடகட்டமடுவு பஞ்சாயத்து என்ற பெயரில் வழங்கப்பட்டு அதே பயன்பாட்டில் இருப்பது செயற் பொறியாளர், அரூர் மற்றும் வட்டாட்சியர் அரூர அவர்களின் சான்று ஆகியவற்றின் வாயிலாக அறியப்படுகிறது. எனவே மின் இணைப்பின் பயன்பாட்டில் விதிமீறல்கள் இல்லை என்பது தெரியவருகிறது.*

*மின் இணைப்பு வழங்கப்பட்டபொழுது விண்ணப்பதாரர் கோரிய புல எண்ணின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் புகார் கொடுக்கும்வரை ஏறத்தாழ 5 ஆண்டுகளாக எந்த புகாரும் மின் இணைப்பு உள்ள திறந்தவெளி கிணற்றின் உரிமை தொடர்பாக பெறப்படவில்லை. மேலும், வட்டாட்சியர் அவர்களின் சான்றின் அடிப்படையில் மின் இணைப்பு உள்ள திறந்தவெளி கிணறானது 3 புல எண்களுக்கு இடைப்பட்டு உள்ளது. என்பது அறியப்பட்டமையால், நிலத்தின் உரிமை மற்றும் மின் இணைப்பு மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மின் இணைப்பின் உரிமைதாரரான தனி அலுவலர், வேடகட்டமடுவு பஞ்சாயத்து அவர்களுக்கு கடிதம் அனுப்பி அவரின் பதிலின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரங்களை மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு செயற் பொறியாளர், அரூர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.04.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு S. சதாசிவம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு T. வனிதா, செயற்பொறியாளர்/இ&ப/அரூர், தருமபுரி மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள் , குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக் கை சம் பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 மேல்முறையீட்டாளர் தருமபுரி மாவட்டம் , அரூர் வட்டம் , ஆலங்குட்டை கிராமத்தில் வசித்து வருவதாகவும், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தீர்த்த மலை பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட ஆலங்குட்டை கிராமத்தில் உள்ள மின் இணைப்பு எண். 08–127–013–140–ஐ நிரந்தரமாக துண்டிக்க தலைவர் CGRF, தருமபுரி அவர்களிடம் 16.09.2022 அன்று மனு அளித்திருந்ததாகவும், இந்த புகார் மனுவிற்கு CGRF, தருமபுரி அவர்களிடமிருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஆணையால் அதிருப்தி அடைந்த தான் மின் இணைப்பை நிரந்தரமாக துண்டிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

5.2 தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தீர்த்த மலை பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட ஆலங்குட்டை கிராமத்தில் உள்ள மின் இணைப்பு எண். 08–127–013–140–ன் விண்ணப்பதாரர் மற்றும் நுகர்வோரானவர் தனி அலுவலர், வேடகட்டமடுவு பஞ்சாயத்து, அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம் அவர்கள் மேற்கண்ட மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பத்தில் சர்வே எண்.72/3–ல் உள்ள திறந்த வெளி கிணற்றிற்கு என்று குறிப்பிட்டு 2017–ல் மேற்கண்ட மின் இணைப்பை பெற்றுள்ளதாகவும், மேலும் இந்த விண்ணப்பத்துடன் நில உரிமைக்கான எந்த வருவாய் துறை ஆவணங்களும்

(FMB, பட்டா, சிட்டா, பதிவு செய்யப்பட்ட ஆவணம்) சமர்ப்பிக்கபடவில்லை எனவும், முழுமை பெறாத (Incomplete Application) விண்ணப்பதை விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்டு, உரிமம்தாரரால் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், மின் பகிர்மான விதி 27–ன்படி விண்ணப்பத்தை உரிமம்தாரர் நிராகரித்திருக்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் போது மின் பகிர்மான விதி 27–ஐ கடைப்பிடிக்கவும், ஆவணங்கள் பெறுவதில் எந்த விதி விலக்கும் அளிக்கப்படவில்லை என அறிய முடிகிறதாகவும், இவ்வாறு எந்த ஒரு வருவாய்துறை ஆவணங்கள், இருமடங்கு காப்பீட்டு தொகை, காப்புறுதி பத்திரம் பெறாமல் மின் இணைப்பு வழங்கிய செயலானது நுகர்வோரும், உரிமம்தாரரும் விண்ணப்பம் மற்றும் இசைவுப்பத்திரம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள வாரிய விதிமுறைகளையும், Terms and condition for supply of Electricity (DC Chapter 6) ஐ மீறிய செயலாகும். எனவே பகிர்மான விதி 33ன் படி இசைவு பத்திரத்தை உரிமம்தாரர் முடிவுக்கு கொண்டு வந்து மின் இணைப்பை துண்டிக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மனுதாரரின் புகாரின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்ட புல எண்ணில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு உரிமை தொடர்பான ஆவணங்கள் உதவி பொறியாளர், தீர்த்த மலை அவர்களால் கோரப்பட்டு வ ட்டாட்சியர் ஆரூர் அவர்களால் வழங்கப்பட்ட கடிதத்தின்படி மின் இணைப்பு உள்ள கிணறானது புல எண்கள் 72/1B–4, 72/1B6 மற்றும் 72/3 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ளது என தெரியவருவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் 03.04.2019–இல் வழக்கப்பட்ட ஆணைப்படி புறம்போக்கு இடங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு மின் இணைப்பு வழங்க துறையிடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட வேண்டும் என தெரிவிக்கபட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 இந்த கருத்தானது முற்றிலும் தவறானது எனவும், வட்டாட்சியர், அரூர் அவர்களின் அறிக்கையின்படி 08–127–013–140–இன் மின் இணைப்பானது சர்வே

எண்.1) 72/1B6 2) 72/1B4 மற்றும் 3) 72/3 ஆகிய புல எண்களில் உள்ள கிணற்றில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், உரிமம்தாரர் அறிக்கையின்படி மேற்கண்ட மின் இணைப்பு சர்வே எண். 72/3–க்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என தெரியவருவதாகவும், விண்ணப்பதாரர் மற்றும் நுகர்வோரானவர் மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பத்தில் 72/3–ஐ மட்டும் குறிப்பிட்டு மின் இணைப்பை பெற்றுள்ளதாகவும், மேற்படி கிணறானது 72/3 மட்டும் அல்லாமல் சர்வே எண்.1) 72/1B6 மற்றும் 2) 72/1B4 ஆகிய இரண்டு தனிநபர்களுக்கும் பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளதால் தன்னிடம் நுகர்வோர் எந்த ஒரு சம்மத கடிதமும் பெறவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேற்கண்ட மின் இணைப்பிற்கு செல்லும் வயர்கள் தனக்கு சொந்தமான சர்வே எண். 72/1B6–ல் உள்ள கம்பத்திலிருந்து தன்னுடைய நிலத்திற்கு மேலாக செல்கிறது எனவும், இதற்கான சம்மதக் கடிதம் தன்னிடமிருந்து பெறவில்லை எனவும், இத்தகைய செயலானது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட விதிமுறைகளையும் (Term and condition) உரிமம்தாரரால் அங்கீகரிக்கப்படாத சர்வே எண்.1) 72/1B6 2) 72/1B4 மற்றும் 3) 72/3 கூட்டாக உள்ள கிணற்றில் மேற்கண்ட மின் இணைப்பை பயன்படுத்துவது மின் வழங்கல் விதி 19ன்படி குற்றமாகும். எனவே நுகர்வோர் (Term and condition) ஐ மீறி இருப்பதால் மின் பகிர்மான விதி 33ன்படி இசைவுப் பத்திரத்தை முடிவுக்கு கொண்டு வந்து மின் இணைப்பை துண்டிக்கவும், உரிமம்தாரரால் அங்கீகரிக்கப்படாத சர்வே எண்களில் உள்ள கிணற்றில் மேற்கண்ட மின் இணைப்பை பயன்படுத்துவதால் மின் வழங்கல் விதி 19A ன்படி உரிமமதாரர் ஆய்வு செய்து உரிய தண்டம் விதித்து மின் இணைப்பை தனக்கு கூட்டுரிமை உள்ள கிணற்றிலிருந்து அகற்ற வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மின் இணைப்பு எண். 08–127–013–140 ஆனது உதவி பொறியாளர் கடிதத்திலும், விண்ணப்பதாரரின் விண்ணப்பத்திலும் மற்றும் செயற்பொறியாளர் அரூர் அவர்களின் கடிதத்திலும் எண். 72/3–க்கு மட்டுமே அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது என அறிவதாகவும், வட்டாட்சியர் அரூர் அவர்களின் அறிக்கையின்படி மேற்கண்ட மின் இணைப்பை பயன்படுத்தும் கிணறானது உரிமம்தாரரால் அங்கீகரிக்கப்படாத சர்வே எண்.1) 72/1B6 2) 72/1B4 மற்றும் 3) 72/3

ஆகியவற்றில் கூட்டாக உள்ள கிணற்றில் நுகர்வோரால் பயன்படுத்துவது தெரியவருவதாகவும், அத்தகைய செயல் வாரிய விதிமுறைகளை மீறிய செயல் ஆகும் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மின் இணைப்பு வழங்கப்பட்ட போது விண்ணப்பதாரர் கோரிய எண்ணில் 72/3ல் மட்டும் தற்போது நுகர்வோரால் பயன்படுத்தப்பட்டு வரும் கிணறானது இல்லை என வட்டாட்சியர் அரூர் அவர்களின் அறிக்கையின் மூலம் அறிய முடிவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேற்கண்ட மின் இணைப்பானது கடந்த 08/2022 முதல் தனக்கு கூட்டு பாத்தியம் உள்ள கிணற்றில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மின் பயன்பாட்டு அட்டவணை மூலம் அறிய முடிகிறது எனவும் மேற்கண்ட மின் இணைப்பு தனக்கு சொந்தமான கூட்டு பாத்தியம் உள்ள கிணற்றில் பயன்படுத்தும் பொழுதுதான் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் புகார் அளிக்கும் உரிமை உள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 மேலும், வட்டாட்சியர் அவர்களின் சான்றின் அடிப்படையில் மின் இணைப்பு உள்ள திறந்தவெளி கிணறானது 3 புல எண்களுக்கு இடைப்பட்டு உள்ளது என்பது அறியப்பட்டதாகவும், வட்டாட்சியர் அரூர் அவர்களின் அறிக்கையின்படி நுகர்வோர் பயன்படுத்தும் கிணறானது சர்வே எண். 1) 72/1B6 2) 72/1B4 மற்றும் 3) 72/3 ஆகிய சர்வே எண்களில் அமைந்துள்ளதாகவும், மேற்கண்ட சர்வே எண்களின் இடைப்பட்ட பகுதிகளில் அமையவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 நிலத்தின் உரிமை மற்றும் மின் இணைப்பு மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மின் இணைப்பின் உரிமைதாரரான தனி அலுவலர், வேட்கட்டமடுவு பஞ்சாயத்து அவர்களுக்கு கடிதம் அனுப்பி அவரின் பதிலின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரங்களை மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு செயற் பொறியாளர், அரூர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மேலும் தன்னுடைய CGRF மனு சம்பந்தமாக விண்ணப்பதாரர் மற்றும் நுகர்வோரை, எதிர்மனுதாரர் அவர்கள் CGRF மன்றம் விசாரிக்கும் வரை விசாரணை செய்து அறிக்கை பெறவில்லை. விண்ணப்பதாரர் மற்றும் நுகர்வோரிடம் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளிக்கும் போது நில உரிமைக்கான சான்று மற்றும் ஆவணங்கள் உரிமம்தாரர் கேட்க வேண்டும். ஆனால் மன்றமானது உரிமம்தாரரை தற்போது நில உரிமைக்கான சான்றும் ஆவணங்கள் நுகர்வோரிடம், கேட்டு பெற அறிவுறுத்தியிருப்பது மின்பகிர்மான விதி 27–க்கு எதிராக அமைகிறது. மேலும் பார்வை 7–ல் கண்ட கிராம நிர்வாக அலுவலர் சான்றுபடி நுகர்வோர் மின் இணைப்பு வேண்டிய கிணறானது 100 மீட்டருக்கு அப்பால் சர்வே எண். 72/3–ல் இருக்க வேண்டும். மேலும் தன்னுடைய கோரிக்கை மேற்கண்ட கிணற்றின் உரிமை சம்பந்தமாக இல்லை. 08–127–013–140 மின் இணைப்பை நிரந்தரமாக துண்டிக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 மேலும் தமிழ்நாடு மின் பகிர்மான விதி மற்றும் மின் வழங்கல் விதிகளை பின்பற்றாமல் இது போன்று மின் இணைப்பு வழங்கப்படும் செயல்கள், தனி நபருக்கு சொந்தமான இடத்தில் நில உரிமையே இல்லாத யார் வேண்டுமானலும் மின் இணைப்பு பெற்று விடலாம் என்பதற்கு முன் உதாரணமாகவும், இந்திய அரசியலமைப்பு சட்டம் சரத்து 300 Aல் இந்திய குடிமகனுக்கு வழங்கியுள்ள சொத்து உரிமையும் பாதிக்கும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 எனவே விதித்தொகுப்புகளை மீறி நுகர்வோரால் பயன்படுத்தப்பட்டு வரும் மின் இணைப்பு எண் 08–12–013–140 –ஐ நிரத்தரமாக துண்டிக்க ஆவண செய்யுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 தனி அலுவலர் வேடகட்டமடுவு பஞ்சாயத்து அவர்கள் 28.06.2017 ச.எண் 72/3–ல் உள்ள திறந்த வெளி கிணற்றிற்கு பொது மக்கள் பயன்பாட்டிற்காக தண்ணீர் வழங்குவதற்காக சமர்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் அப்போதைய உதவிசெயற்பொறியாளர்/கிராமியம்/அரூர் அவர்களால் 05.07.2017 அன்று

மதீப்பிட்டின் அனுமதி வழங்கப்பட்டு 27.07.2017 அன்று மின்இணைப்பானது வீதப்பட்டி II –A வில் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்கண்ட மின்இணைப்பானது அரசு அலுவலர் அரசின் திட்டங்களின் அடிப்படையில் பொது மக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக அவரால் பரிந்துரைக்கப்பட்ட சர்வே எண்ணில் விண்ணப்பித்ததால் அவருடைய சான்றின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும் மற்ற பிற ஆவணங்கள் ஏதும் பிரிவு அலுவலரால் கோரப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரரின் புகாரின் அடிப்படையில் மின்இணைப்பு வழங்கப்பட்ட புல எண்ணில் உள்ள திறந்த வெளி கிணற்றிற்க்கு உரிமை தொடர்பாக ஆவணங்கள் உதவிபொறியாளர்/இப/தீர்த்தமலை அவர்களால் கோரப்பட்டு, வட்டாட்சியர் அரூர் அவர்களால் வழங்கப்பட்ட கடிதத்தின் படி மின்இணைப்பு, வேடகட்டமடுவு தரப்பு ஆலங்குட்டை பொதுமக்கள் பயன்படுத்தும் திறந்தவெளி கிணறானது தாம்பல் கிராம புல எண்:72/1பி4 பரப்பு: 0.38.0 ஹெக்டேர் அ.சுருட்டையன் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் ½ சென்ட் நிலமும், புல எண்:72/1பி6 பரப்பு 0.37.0 ஹெக்டேர் சி.வெள்ளையன் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் ½ சென்ட் நிலமும், புல எண் 72/3–ல் பரப்பு 0.76.5 ஹெக்டேர் அரசு புறப்போக்கு கல்லாங்குத்து என வகைபாடுடைய நிலத்தில் 1 சென்ட் நிலமும் அமைந்துள்ளதாக தெரியவருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் 03.04.2019 வழங்கப்பட்ட ஆணைப்படி புறப்போக்கு இடங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு மின்இணைப்பு வழங்க உரிய துறையிடம் இருந்து தடையில்லா சான்று பெறபட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மேற்கண்ட மின்இணைப்பானது எந்த கட்டிட வகைக்கும் வழங்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மின்இணைப்பு எண். 127–013–140 என்பது பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக தனி அலுவலர் வேடகட்டமடுவு பஞ்சாயத்து என்ற பெயரில்

வழுங்கப்பட்டு அதே பயன்பாட்டில் இருப்பது செயற்பொறியாளர் அரூர் மற்றும் வட்டாட்சியர் அரூர் அவர்களின் சான்று ஆகியவற்றின் வாயிலாக அறியப்படுகிறது. எனவே மின் இணைப்பின் பயன்பாட்டில் விதிமீறல்கள் இல்லை என்பது தெரியவருகிறது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மின் இணைப்பு விண்ணப்பதாரர் கோரிய புல எண்ணின் அடிப்படையில் வழகங்கப்பட்டுள்ளதாகவும், தற்போது மனுதாரர் புகார் கொடுக்கும் வரை ஏறத்தாழ ஐந்தாண்டுகளாக எந்த புகாரும் மின்இணைப்பு உள்ள திறந்த வெளி கிணற்றில் உரிமை தொடர்பாக மேல்முறையீட்டாளரிடமிருந்து பெறப்படவில்லை எனவும், மேலும் வட்டாட்சியர் அவர்கள் சான்றின் அடிப்படையில் மின்இணைப்பு உள்ள திறந்த வெளி கிணறானது மூன்று புல எண்களுக்கு இடைப்பட்டுள்ளது என்பது அறியப்பட்டமையால் நிலத்தின் உரிமை மற்றும் மின்இணைப்பு மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மின்இணைப்பின் உரிமைதாரர் ஆன தனி அலுவலர்/ஊராட்சி ஒன்றிய வளர்ச்சி அலுவலர், அரூர் ஊராட்சி ஒன்றியம் அரூர், அவர்களுக்கு கடிதம் அனுப்பபட்டுள்ளதாகவும், அவரிடம் இருந்து எந்த பதிலும் கிடைக்கபெறாததால் இவ்வலுவலகத்தில் இருந்து வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், அரூர் அவர்களுக்கு மின்இணைப்பு துண்டிப்பு செய்ய கோரிய தங்களின் கோரிக்கை சம்மந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மின் இணைப்பு 127-013-140 பொதுமக்கள் குடிநீர் பயன்பாட்டிற்க்கு உள்ளதால் வட்டார வளர்ச்சி அலுவலர், அரூர் அல்லது வருவாய் கோட்டாச்சியர் அரூர் அவர்களிடம் இருந்து கடிதம் பெறப்பட்ட உடன் வாரிய விதிமுறைகளின் படி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும், எதிர்மனுதாரர் நிலத்தின் உரிமை மற்றும் மின் இணைப்பு மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் வருவாய் கோட்டாட்சியர் அரூர் அவர்களுக்கு மின் துண்டிப்பு தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டதாகவும் அக்கடிதத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்கூறிய மின் இணைப்பை ரத்து செய்தால் 800 குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் என வும், எனவே இந்த

குடிநீர் மின் இணைப்பை துண்டிக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு .V.சக்தி, த/பெ.வெள்ளையன், தருமபுரி மாவட்டம் , அரூர் வட்டம் , ஆலங்குட்டை கிராமத்தில் வசித்து வருவதாகவும் , தீர்த்தமலை பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட ஆலங்குட்டை கிராமத்தில் , விண்ணப்பதாரர், தனி அலுவலர், வேடகட்டமடுவு பஞ்சாயத் து, அரூர் வட்டம் , தருமபுரி மாவட்டம் அவர்கள் சர்வே எண்.72/3ல் உள்ள திறந்த வெளி கிணற்றிற்கு என்று குறிப்பிட்டு 2017ல் மின் இணைப்பு எண் .08–127–013–140 பெற்றதாகவும், அவ்விண்ணப்பதுடன் நில உரிமைக்கான எந்த வருவாய் துறை ஆவணங்களும் (FMB, பட்டா, சிட்டா, பதிவு செய்யப்பட்ட ஆவணம் ) சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேலும் விண்ணப்பதாரர் மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பத்தில் சர்வே.எண்.72/3ஐ மட்டும் குறிப்பிட்டு மின் இணைப்பு பெற்றுள்ளதாகவும் , வட்டாட்சியர், அரூர் அவர்களின் அறிக்கையின் படி மி ன் இணைப்பு எண் . எண்.08–127–013–140 ஆனது சர்வே எண் .72/1B6, 72/1B4, மற்றும் 72/3 ஆகிய புல எண்களில் உள்ள கிணற்றில் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார் எனவும், மேற்படி கிணறானது 72/3 மட்டும் அல்லாமல் சர்வே எண்.1) 72/1B6 மற்றும் 2) 72/1B4 ஆகிய இரண்டு தனிநபர்களுக்கும் பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளதால் தன்னிடம் நுகர்வோர் எந்த ஒரு சம்மத கடிதமும் பெறவில்லை எனவும், எனவே கூட்டாக உள்ள கிணற்றில் வழங்கப்பட்ட மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

7.4 மேலும் மேல்முறையீட்டாளர் குறிப் பிடுகையில் நுகர்வோர் பயன்படுத்தும் கிணறானது சர்வே எண் .72/1B6, 72/1B4, மற்றும் 72/3 ஆகிய சர்வே எண்களில்

அமைந்துள்ளது எனவும் கிராம நிர்வாக அலுவலர் சான்று படி நுகர்வோர் மின் இணைப்பு வேண்டிய கிணறானது 100 மீட்டருக்கு அப்பால் சர்வே எண் .72/3ல் இருக்க வேண்டும் என வும் புறம்போக்கு நிலங்களில் உள்ள கிணற்றுக்கு வழங்கப்படும் மின் இணைப்புக்கு வட்டாட்சியர் அவர்களிடமிருந்து தடை இல்லா சான்று பெற வேண்டும் எனவும் ஆனால் மேற்கூறிய மின் இணைப்பு வழங்கப்பட்ட போது அது பெறப்படவில்லை எனவும் மேலும் தன்னுடைய கோரிக்கை மேற்கண்ட கிணற்றின் உரிமை சம்பந்தமாக இல்லை எனவும் மின் இணைப்பு எண்.08–127–013–140 ஐ நிரந்தரமாக துண்டிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் , தனி அலுவலர் வேடகட்டமடுவு பஞ்சாயத்து 28–06–2017 அன்று அரசு புறம்போக்கு நிலத்திற்குட்பட்ட சர்வே எண்.72/3ல் உள்ள திறந்த வெளி கிணற்றுக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தண்ணீர் வழங்குவதற்காக சமர்ப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் 05–07–2017 அன்று மதீப்பீட்டு அனுமதி வழங்கப்பட்டு 27–07–2017 அன்று மின் இணைப்பானது வீதப்பட்டி II A –ல் வழங்கப்பட்டதாகவும் மின் இணைப்பு வழங்கப்பட்ட போது விண்ணப்பதாரர் கோரிய புல எண்ணின் அடிப்படையில் வழங்கப்பட்டதாகவும் , தற்போது மேல்முறையீட்டாளர் புகார் கொடுக்கும் வரை ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளாக எந்த புகாரும் மின் இணைப்பு உள்ள திறந்தவெளி கிணற்றின் உரிமை தொடர்பாக பெறப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேல்முறையீட்டாளரின் புகாரின் அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்ட புல எண்ணில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு உரிமை தொடர்பான ஆவணங்கள் வட்டாட்சியர், அரூர் அவர்களிடம் எதிர்மனுதாரரால் கோரப்பட்டதாகவும் அவ்வாறு கோரப்பட்டதற்கு வேடகட்டமடுவு தரப்பு, ஆலங்குட்டை பொதுமக்கள் பயன்படுத்தும் திறந்தவெளி கிணறானது , தாம்பல் கிராம புல எண் .72/1பி4 பரப்பு 0.38.0 ஹெக்டேர் அ.சுருட்டையன் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் ½ சென்ட் நிலமும் , புல எண்.72/1பி6 பரப்பு 0.37.0 ஹெக்டேர் சி .வெள்ளையன் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் ½ சென்ட் நில மும், புல எண் .72/3ல் பரப்பு 0.76.5 ஹெக்டேர் அரசு புறம்போக்கு கல்லாங்குத்து என வகைபாடுடைய நிலத்தில் 1 சென்ட் நிலமும் அமைந்துள்ளது என வட்டாட்சியர் தெரிவித்தாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்

7.7 மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த ஆவணங்களின் ஒன்றான கிராம நிர்வாக அலுவலர் சான்றளித்த கடிதத்தில் தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் வேடகட்டமடுவு தரப்பு ஆலாங்குட்டை கிராமத்தில் வசிக்கும் சக்தி த/பெ. வெள்ளையகவுண்டர் என்பவருக்கு தாம்பல் கிராமம் பட்டா எண்.1121, சர்வே எண்.72/1B6 0.37.0 ஆழ்துளை கிணறு மற்றும் நி லம் வைத்துள்ளார் எனவும் அந்த நிலம் மற்றும் கிணறு அவருக்கு சொந்தமானது எனவும் சான்றளிக்கப்பட்டதன் மூலம் மேல்முறையீட்டாளருக்கு தனியாக பாத்தியப்பட்ட ஆழ்துளை கிணறு இருப்பது அறியப்படுகிறது . மேலும், எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக மேல்முறையீட்டாள ரின் பெயரில் அவருக்கு சொந்தமான சர்வே எண் .72/1B6ல் இரண்டு விவசாய மின் இணைப்புகள் 127-013-172, மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் : 15-02-2020 மற்றும் 127-013-195 மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் : 16-03-2022 இருப்பது அறியப்படுகிறது.

7.8 தமிழ்நாடு மின்உற்பத்தி ம ற்றும் பகிர்மான கழகத்தால் 03-04-2019 அன்று வழங்கப்பட்ட உத்தரவின்படி புறம்போக்கு இடங்களில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு மின் இணைப்பு வழங்க உரிய துறையிடம் இருந்து தடை இல்லா சான்று பெறப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது . ஆனால், மேற்கண்ட மின் இணைப்பானது எந்த கட்டிட வகைக்கும் வழங்கப்பட வில்லை , மாறாக பொது மக்கள் பயன்பாட்டிற்கான குடிநீர் தேவைக்காக வீதப்பட்டி IIAவில் தனி அலுவலர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 நிலத்தின் உரிமை மற்றும் மின் இணைப்பு மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் வருவாய் கோட்டாட்சியர் அரூர் அவர்களுக்கு மின் துண்டிப்பு தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார் . அக்கடிதத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடமிருந்து 17.04.2023 அன்று பெறப்பட்ட பதில் கீழ்க்கண்டவாறு:

*"அரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேடகட்டமடுவு ஊராட்சி ஆலங்குட்டை கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி*

*செய்ய ஒரே ஆதாரமான திறந்தவெளி கிணற்றை சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின்பேரில் அமைக்கப்பட்டதாகவும் , மின் இணைப்பு எண் .127-013-140 தனி அலுவலர் பெயரில் பெறப்பட்டதாகவும் , மேற்படி பணியினை ஆய்வு செய்யப்பட்டதில் வேடகட்டமடுவு ஊராட்சிக்குட்பட்ட தாம்பல், ஆலங்குட்டை மற்றும் நண்டுப்பள்ளம் ஆகிய மூன்று குக்கிராமங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய ஏதுவாக சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின் படி பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய 7 புதிய மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் குடிநீர் தேவை இந்த கிணறு மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் , இதனால் சுமார் 800 குடும்பங்கள் பயனடைந்துள்ளதாகவும் மேலும் இந்த திறந்தவெளி கிணறு ஆனது ¼ பகுதி தனிநபர் பெயரி லும் ¾ பகுதி கல்லாங்குத்து பகுதியாகும் எனவும் , இந்த திறந்தவெளி கிணறு மட்டுமே கோடை காலங்களில் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் ஒரே நீர் ஆதாரமாக உள்ளது எனவும் , இந்த மின் இணைப்பை இரத்து செய்தால் 800 குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் என்பதால், இந்த குடிநீர் மின்இணைப்பை துண்டிக்க வேண்டாம் "* என கேட்டுக்கொண்டுள்ளார்.

7.10 மின் இணைப்பு எண் .127-013-140 ஆனது பொது மக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக வீதப்பட்டி IIAல் தனி அலு வலர் வேடகட்டமடுவு பஞ்சாயத்து என்ற பெயரில் வழங்கப்பட்டு அதே பயன்பாட்டில் இருப்பது வட்டார வளர்ச்சி அலுவலர் அரூர் அவர்களின் சான்றின் வாயிலாக அறியப்படுகிறது . எனவே, மின் இணைப்பின் பயன்பாட்டில் விதி மீறல்கள் இல்லை என்பது தெரிய வருகிறது

7.11 எதிர்மனுதாரர் அரசு துறையை சார்ந்த தனி அலுவலர் , வேடகட்டமடுவு பஞ்சாயத்து அவர்களின் பெயரில் அரசு புறம்போக்கு நிலத்திற்குட்பட்ட சர்வே எண்.72/3-க்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து 2017ல் மின் இணைப்பு வழங்கிய நிலையில், தற்சமயம் 1/4 பகுதி அவருடைய இடத்தில் இருப்பதாக வாதிடும் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு வழங்கிய காலத்தில் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என தெரியவருகிறது . மேலும், வட்டாட்சியர் அளித்த ஆவணங்களின் மூலம் கிணற்றின் 3/4 பகுதி கல்லாங்குத்து பகுதியாக இருப்பது

தெரியவருகிறது. இதன் மூலம் அந்த கிணற்றின் மின் இணைப்பானது வீதப்பட் டி IIAல் வழங்கப்பட்டு தொடர்ந்து அந்த கிராமத்தில் பயன்பாட்டில் இருப்பது தெரியவருகிறது.

7.12 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு வழங்கப்பட்ட 2017 காலகட்டத்திலும், அவருக்கு சொந்தமான சர்வே எண் .72/1B6ல் அவருடைய பெயரில் இரண்டு மின் இணைப்புகள் பெற்ற காலத்திலும் மேற்கூறிய மின் இணைப்பு தொடர்பாக எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என தெரியவருகிறது . இந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2011–2012ம் ஆண்டு திட்டத்தின் கீழ் பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய அரசு நிதியில் , பெறும்பகுதி அரசு நி லத்தில் சுமார் 3 குக்கிராமங்களில் வசிக்கும் 800 குடும்பங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பயன்படும் கிணற்றின் மீது தான் எந்த உரிமையும் கோரவில்லை எனவும் ஆனால் மின் இணைப்பை மட்டும் துண்டிக்க வேண்டும் என கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சரியான வாதமாக ஏற்கப்படவில்லை.

7.13 மேலும் நிலத்திற்கு உரிமை இல்லாதவர் அரசு புறம்போக்கு நிலத்தை பயன்படுத்தி அதில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் பட்சத்தில் தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப்பின்மைச் சான்றிதழ் பெற்றால் மின் இணைப்பு வழங்கலாம் என்பது மின் இணைப்பு வழங்குவதற்காக வழங்கப்பட்ட சலுகையாகவே கருதப்படுகிறது. அரசுக்கு சொந்தமாக உள்ள புறம்போக்கு நிலத்தில் (கல்லாங்குத்து வகைபாடு ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அரசு நிதியில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக தனி அலுவலர் பெயரில் சர்வே எண்.72/3ல் பெரும்பகுதி உள்ள கிணற்றில் மின் இணைப்பு வழங்கியதில் எந்த வித முறைகேடும் இருப்பதாக தெரியவில்லை.

7.14 இது சம்பந்தமாக , ஒருவர் மின்னிணைப்பை உபயோகித்துவரும் நிலையில் ஒரு கட்டிடத்தின் அத்தியாவசியமான மின்சாரத்தை மின் துண்டிப்பு செய்ய போதுமான காரணங்களை ஆராய விரும்புகிறேன்.

## STATUTORY PROVISIONS FOR DISCONNECTION

| Sl. No. | Provision | Reason |
|---|---|---|
| 1 | Section 56 of Electricity Act 2003 Regulation 21 of TNE Supply Code | Non payment of dues |
| **Court Directions** | | |
| 2 | Specific order of disconnection issued by the Court. | |

மேற்கூறிய விதியின்படி பயன்படுத்திய மின் நுகர்வுக்கான மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மின் துண்டிப்பு செய்யலாம் என அறியப்படுகிறது . மேலும் நீதிமன்ற உத்தரவு க்கிணங்க மட்டுமே மின் துண்டிப்பு செய்யலாம் என்பதும் தெரிய வருகிறது.

7.15 குடிநீர் பயன்பாடு என்பது ஒவ்வொரு குடிமக்களுக்கும் வாழ்வாதாரத்தின் அடிப்படை தேவையாகும் . கிணற்றின் ஒரு பகுதி தனது சர்வே எண்ணிலும் இடம் பெற்றது என 2022ற்கு பின்பே ஆட்சேபணை தெரிவித்து , மின் இணைப்பு வழங்கப்பட்ட கிணற்றின் மீது உரிமை கோராமல் , மின் இணைப்பை மட்டும் துண்டிக்க வேண்டும் என் ற மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சரியான நியதியாக இல்லை. மேலும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் கிணற்றின் மின் இணைப்பு தனி அலுவலர் பெயரில் பயன்பாட்டில் இருக்கும் நிலையில், தன் பெயரில் இல்லாத மின் இணைப்பை துண்டிக்க கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

7.16 ஆகவே, நிரந்தர மின் துண்டிப்பு வேண்டி கோரப்பட்ட மின் இணைப்பானது பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொது பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதால் அம்மின்இணைப்பை மின் துண்டிப்பு செய்ய வழி வகை இல்லை. எனவே, மேல்முறையீட்டாளர் அவரின் கோரிக்கை சம்பந்தமாக மற்ற சட்டபூர்வ நடவடிக்கைகளை நாடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் நிரந்தர மின் துண்டிப்பு வேண்டி கோரப்பட்ட மின் இணைப்பானது பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொது பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதால்

அம்மின்இணைப்பை மின் துண்டிப்பு செய்ய வழி வகை இல்லை என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 11/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு சக்தி,
த/பெ.வெள்ளையன்,
ஆலங்குட்டை கிராமம், அம்மாபேட்டை (அஞ்சல்),
அரூர் தாலுகா, தருமபுரி – 636906.

2. செயற்பொறியாளர்/இ&ப/அரூர்,
தருமபுரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திரு.வி.க. நகர், அரூர் – 636 903,
தருமபுரி தாலுக்கா.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
தருமபுரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சேலம் மெயின் ரோடு,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில்,
தருமபுரி–636 705.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.